

**பள்ளிக் கல்வித் துறை**

**மானியக் கோரிக்கை எண் 43**

# அறிவிப்புகள்

## 2026 - 2027

## ராஜ்மோகன்

### பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்



# பள்ளிக் கல்வித் துறை

## மானியக் கோரிக்கை எண் 43

# அறிவிப்புகள்
# 2026 - 2027


## ராஜ்மோகன்
### பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்



# அறிவிப்புகள்

## 2026 - 2027

## உள்ளடக்கம்


| வ. எண் | இயல் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு – அறிவுப் பாடத்திட்டம் - TN-ARIVU | 1 |
| 2 | திறன் ப்ளஸ் - THIRAN PLUS | 2 |
| 3 | தமிழ்நாடு தன்நிலை கற்றல் திட்டம் - TNPAL | 3 |
| 4 | தமிழ்நாடு பள்ளிகளுக்கான மேம்படுத்தப்பட்ட செயற்கை நுண்ணறிவு, எந்திரனியல் மற்றும் இணையதள கல்வி கருவிகளுக்கான திட்டம் - TN SPARK | 4 |
| 5 | வெற்றிப் பாதை - Vetri Paathai | 5 |
| 6 | மதிச்சுடர் - MATHICHUDAR | 6 |
| 7 | திறன்மிகு அறிவியல் ஆய்வகங்கள் - Smart Science Lab | 7 |
| 8 | தமிழ்நாடு மாணவர் புதுமை மற்றும் தொழில்முனைவுத்திறன் மேம்பாட்டுத் திட்டம் - TN IGNITE | 8 |
| 9 | மகிழ்வுடன் முன்னேறு - Magizhvudan Munneru | 9 |
| 10 | வாசிப்பை நேசிப்போம் - Vasippai Nesippom | 10 |
| 11 | தமிழ்ப் பேச்சு எங்கள் உயிர்மூச்சு | 11 |
| 12 | ஸ்போர்ட்ஸ் ப்ளஸ் - Sports Plus | 12 |
| 13 | சதுரங்கம் மற்றும் பாரம்பரிய விளையாட்டுகள் -Chess and Traditional Games | 13 |
| 14 | ஒளிரும் புன்னகை (Dental, Eye & Ear Health) | 14 |
| 15 | உயர்கல்வி வழிகாட்டிச் செயலி - Higher Education Guidance App | 15 |




| வ. எண் | இயல் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 16 | துணை - THUNAI | 16 |
| 17 | மாற்றுத்திறன் மாணவர்களின் திறன்களை உயர்த்தும் முன்னெடுப்பு - ENABLE | 17 |
| 18 | பாதுகாப்பான பள்ளி – மகிழ்வான கற்றல் - Safe Schools Enabling Joyful Learning. | 18 |
| 19 | ஆசிரியர்களுக்கான பன்னாட்டு சிறப்புத் திறன் மேம்பாட்டுத் திட்டம் - International Teacher Excellence Programme | 19 |
| 20 | ஆசிரியர்களுக்கான கல்விசார் திட்டமிடல் மற்றும் செயலாக்கப் பயிற்சி - TN-LEADS | 20 |
| 21 | ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மின்னுரு மாற்றம் -Digital transformation of Teachers Recruitment Board | 21 |
| 22 | அரசுத் தேர்வு ஆவணங்களை மின்னணுமயமாக்கல் - Digitisation of Government Examination Records | 22 |
| 23 | ஸ்மார்ட் நூலக உறுப்பினர் அட்டை - Smart Library Card | 23 |
| 24 | நூலக செயலி - Noolagam App | 24 |
| 25 | நூலகங்களில் சுகாதாரமான சூழல் - Hygienic Libraries – Happy Readers | 25 |
| 26 | இளைய தலைமுறைக்கு அரிய நூல்கள் 26 | 26 |
| 27 | சென்னைப் புத்தகக் கண்காட்சிக்கு அரசு மானியம் உயர்வு | 27 |
| 28 | சீருடையில் சிறப்பு – விளையாட்டில் தன்னம்பிக்கை - Sports Jerseys | 28 |
| 29 | குடிமைப்பண்புடன் வளரும் தலைமுறை - CIVIC | 29 |
| 30 | ஓடி விளையாடு – திறமைகளை வெளிக்கொணர்வோம் - PLAY | 30 |
| 31 | e-வாசல் – ஒருங்கிணைந்த மின்னுரு நுழைவாயில் e-VAASAL | 31 |




**1. தமிழ்நாடு – அறிவுப் பாடத்திட்டம்.**

**TN-ARIVU - Analytical thinking, Reasoning, Innovation, Venture & entrepreneurship, Upskilling with Artifical Intelligence & Emerging Technology.**

**திறன்களை வளர்த்து தலைமுறை உயர்த்த எதிர்காலத்திற்குத் தயாராகும் வகையில் பகுத்தறிந்து சிந்தித்தல், சிக்கல்களுக்குத் தீர்வு காணுதல், புதுமையான கருத்துகளை உருவாக்குதல், தொழில்முனைவுத் திறன்களை வளர்த்துக் கொள்ளுதல், செயற்கை நுண்ணறிவு மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்துதல் ஆகிய திறன்களை உள்ளடக்கிய இப்பாடத்திட்டம் TN-ARIVU 2027–28 ஆம் கல்வியாண்டு முதல் மாநிலம் முழுவதும் அனைத்துப் பள்ளிகளிலும் செயல்படுத்தப்படும்.**

இப்புதிய பாடத்திட்டம், 1 முதல் 5ஆம் வகுப்பு வரை Arivu – Foundation, 6 முதல் 8ஆம் வகுப்பு வரை Arivu – Discovery, 9 முதல் 12ஆம் வகுப்பு வரை Arivu – Edge என்ற வளர்ச்சிக் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டு தொடக்கநிலையில் வலுவான அடித்தளத்தையும், நடுநிலையில் ஆழமான புரிதலையும், உயர்நிலையில் வாழ்வியல், பணிவாய்ப்பு மற்றும் எதிர்காலத் திறன்களையும் மாணவர்களிடம் உருவாக்கும் வகையில் செயல்படுத்தப்படும்.

**TN ARIVU** - The new curriculum for equipping students with future ready Knowledge, including analytical thinking, problem-solving, innovation, entrepreneurship, proficiency in Artificial Intelligence and emerging technologies will be implemented across all schools in Tamil Nadu from the Academic Year 2027–28.





2. **திறன் ப்ளஸ்.**

**THIRAN PLUS – Targeted Help for Improving Remediation and Academic Nurturing.**

**ஒவ்வொரு மாணவரும் திறனுடன் ... ஒவ்வொரு வகுப்பும் வெற்றியுடன் என்ற இந்நோக்கத்தைச் செயல்படுத்தும் வகையில் அரசுப் பள்ளிகளில், 2 முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் வகுப்பு நிலைக்கேற்ற எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுத் திறன்களை உறுதிப்படுத்தும் நோக்கில் 10.5 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில், “திறன் ப்ளஸ்” ரூ. 12.05 கோடி நிதி ஒதுக்கீட்டில் விரிவாக்கம் செய்யப்படும்.**

அரசுப் பள்ளிகளில் 2 முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் வகுப்பு நிலைக்கேற்ற எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுத் திறன்களை உறுதிப்படுத்தும் நோக்கில், மாணவர்களின் கற்றல் முன்னேற்றம், திறன்சார்ந்த மதிப்பீடுகள் வாயிலாக தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, கற்றல் இடைவெளிகள் உரிய நேரத்தில் கண்டறியப்பட்டு, தேவைக்கேற்ற குறைதீர் கற்றல் வழங்கப்படும். இதனால், மாணவர்கள் வகுப்பிற்கேற்ற கற்றல் திறன்களை முழுமையாக அடைவதோடு மட்டுமல்லாமல், தன்னம்பிக்கை, சிந்தனைத்திறன் மற்றும் தொடர்ச்சியான கற்றல் மனப்பாங்குடன் உயர்கல்வி மற்றும் எதிர்கால வாழ்வின் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வலுவான அடித்தளத்தைப் பெறுவர்.

**THIRAN PLUS Targeted Help for Improving Remediation and Academic Nurturing** will be expanded for students of Classes II to IX benefiting 10.5 lakh students at a cost of **Rs. 12.05 crore.**



**3. தமிழ்நாடு தன்னிலைக் கற்றல் திட்டம்.**
**TN-PAL - Tamil Nadu - Personalised Adaptive Learning.**

**ஒவ்வொரு மாணவருக்கும் தனித்துவமான கற்றலை வலுப்படுத்தும் வகையிலும் தனிப்பயனாக்கப்பட்ட முன்னேற்றம் கிடைக்கும் வகையிலும், செயற்கை நுண்ணறிவு (AI) சார்ந்த 'தமிழ்நாடு தன்நிலைக் கற்றல்' திட்டம், முதற்கட்டமாக 500 அரசு நடுநிலைப் பள்ளிகளில், 6 முதல் 8ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ. 70 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.**

ஒவ்வொரு மாணவருக்கும் தனித்துவமான கற்றல் திறனும் வேகமும் இருப்பதை அடிப்படையாகக் கொண்டு, 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் கல்வித் தேவைகளுக்கு ஏற்ப, தனிப்பயனாக்கப்பட்ட கற்றல் அனுபவம் வழங்கப்படும். செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் துணை கொண்டு கற்றல் இடைவெளிகள் துல்லியமாகக் கண்டறியப்பட்டு, ஒவ்வொரு மாணவருக்கும் அவரவர் முன்னேற்றத்திற்கு ஏற்றவாறு தகவமைக்கப்பட்ட கற்றல் வழிகாட்டுதல் வழங்கப்படும். இதன் வாயிலாக மாணவர்கள், தங்களது முழுத்திறனையும் வெளிப்படுத்தி, தன்னம்பிக்கையுடனும் ஆர்வத்துடனும் கற்றலில் சிறந்து விளங்குவதற்கான எதிர்காலக் கல்விச்சூழல் உருவாக்கப்படும்.

AI powered **Personalised and Adaptive Learning (TN-PAL)** will be launched in the first phase across 500 Government Middle Schools for students of Classes VI to VIII, enabling every learner to progress at their own pace at a cost of **Rs. 70 lakh.**



**4. தமிழ்நாடு பள்ளிகளுக்கான மேம்படுத்தப்பட்ட செயற்கை நுண்ணறிவு, எந்திரனியல் மற்றும் இணையதள கல்வி கருவிகளுக்கான திட்டம்.**

**TN SPARK – Tamil Nadu School Programme for AI, Robotics & Knowledge of online tools.**

**இன்றைய மாணவர்களை நாளைய தொழில்நுட்ப முன்னோடிகளாக மாற்றும் வகையில் செயற்கை நுண்ணறிவு, எந்திரனியல், புதுமை மற்றும் மெய்நிகர் தொழில்நுட்பங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு மூன்று நிலைகளில் "TN SPARK" ரூ. 2.72 கோடி நிதி ஒதுக்கீட்டில் விரிவாக்கப்படும்.**

எதிர்கால உலகின் தேவைகளுக்கு ஏற்ப மாணவர்களைத் தயார்படுத்தும் நோக்கில், கணினிசார் சிந்தனை, தர்க்கரீதியான பகுப்பாய்வு, படைப்பாற்றல், குழுவாக இணைந்து செயல்படும் திறன் மற்றும் சூழலுக்கேற்ற முடிவெடுக்கும் திறன்களை வளர்க்கும் வகையில் செயற்கை நுண்ணறிவு மற்றும் மின்னுரு தொழில்நுட்பப் பாடத்திட்டமானது விரிவாக்கப்படும்.

இது 6 முதல் 8ஆம் வகுப்பு வரை அடிப்படை நிலையாகவும் (Foundational Stage), 9 மற்றும் 10ஆம் வகுப்புகளுக்கு இடைநிலையாகவும் (Intermediate Stage), 11 மற்றும் 12ஆம் வகுப்புகளுக்கு விருப்பப் பாடமாகவும் (Elective Subject) வடிவமைக்கப்படும்.

**TN SPARK,** an Integrated Artificial Intelligence and Digital Technologies Curriculum, will be expanded and implemented in three stages for students of Classes VI to XII to equip them with future-ready digital, innovation and problem-solving skills at a cost of **Rs. 2.72 crore.**



## 5. வெற்றிப் பாதை - Vetri Paathai

**கனவுகள் உயரட்டும், வெற்றிக்கான வாய்ப்புகள் பள்ளிக்கே வரட்டும் என்ற நோக்கில் 172 அரசு மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள், தேசிய அளவிலான உயர்கல்வி நுழைவுத்தேர்வுகளில் வெற்றி பெற்று நாட்டின் முன்னணி உயர்கல்வி நிறுவனங்களில் இடம்பெறும் வகையில், 'வெற்றிப் பாதை' திட்டம் ரூ. 22.36 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்படும்.**

172 அரசு மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள், பள்ளியிலேயே தேசிய அளவிலான நுழைவுத் தேர்வுகளுக்குத் தயாராக தரமான பயிற்சி, மாதிரித் தேர்வுகள் மற்றும் தொடர்ச்சியான கல்வி வழிகாட்டுதலைப் பெறும் வகையில் "வெற்றிப்பாதை திட்டம்" செயல்படுத்தப்படும். மாணவர்களின் சமூக மற்றும் பொருளாதாரப் பின்னணி எதுவாக இருப்பினும் திறமையும் உழைப்பும் கொண்ட மாணவர்கள், நாட்டின் தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் இடம்பெறுவதற்கு வெற்றிப்பாதைத் திட்டம் வழிவகுக்கும். இத்திட்டம், ரூ. 22.36 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**Vetri Paathai Scheme** will be implemented in 172 Government Higher Secondary Schools, providing coaching, model tests and continuous guidance to help Government School students secure admissions to India's premier higher education institutions at a cost of **Rs. 22.36 crore.**



**6. மதிச்சுடர் - MATHICHUDAR.**

**மாணவர்கள் சிந்தித்து சாதிக்கும் தலைமுறைகளாக மாறும் வகையில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் கருத்தியல் புரிதல், பகுப்பாய்வுச் சிந்தனை மற்றும் சிக்கல்களைத் தீர்க்கும் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு திறன் அடிப்படையிலான "மதிச்சுடர் திட்டம்" மதிப்பீடு 2026-2027ஆம் கல்வியாண்டில் ரூ. 18.01 கோடி நிதி ஒதுக்கீட்டில் நடைமுறைப்படுத்தப்படும்.**

வகுப்பறைக் கற்றல் மற்றும் மதிப்பீட்டு நடைமுறைகளை வலுப்படுத்தும் வகையில், "மதிச்சுடர்" திட்டத்தின்கீழ், வகுப்புவாரியான கற்றல் விளைவுகள் மற்றும் திறன்களுக்கு ஏற்ப உயர் சிந்தனை வினாக்கள் மூலமாக 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, ரூ. 18.01 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதன் வாயிலாக, மாணவர்களைக் கட்டமைக்கப்பட்ட திறன் அடிப்படையிலான மதிப்பீடுகளைத் தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்ளத் தயார்படுத்தி, கற்றல் விளைவுகளை மேம்படுத்த வழிவகுக்கப்படும்.

**Competency-based assessment,** essential for enhancing students' conceptual understanding, critical thinking, and problem-solving skills,will be introduced for Government school students in classes 6 to 12 at a cost of **Rs. 18.01 crore.**



## 7. திறன்மிகு அறிவியல் ஆய்வகங்கள்.

**SMART SCIENCE LAB.**

**அறிவியலை சிந்தித்து ஆய்வகத்தில் செயல்படுத்திட 1799 அரசு உயர், மேல்நிலைப் பள்ளிகளில்மாணவர்களின் அறிவியல் சிந்தனையை வளர்க்கும் வகையில் 'திறன்மிகு அறிவியல் ஆய்வகங்களுக்கு' ரூ. 21. 84 கோடி நிதி ஒதுக்கீட்டில் உபகரணங்கள் வழங்கப்படும்.**

மாணவர்கள் பாடப்புத்தகங்களில் கற்றுணர்ந்து கொள்ளும் கருத்துகளைச் செய்முறையில் கற்றுக் கொள்வதற்கு ஏதுவாக, தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய திறன்மிகு ஆய்வகங்கள் 1779 அரசு உயர், மேல்நிலைப்பள்ளிகளில் உருவாக்கப்படும். இவற்றுள் மாணவர்களின் பயன்பாட்டிற்காக 604 ஒருங்கிணைந்த அறிவியல் ஆய்வக உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. இத்திட்டம், ரூ. 21.84 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**Science Lab equipment** will be provided in 1,779 Government High and Higher secondary schools to cater to curriculum requirement, foster scientific thinking among students at a cost of **Rs. 21.84 crore.**





**8. தமிழ்நாடு மாணவர் புதுமை மற்றும் தொழில்முனைவுத்திறன் மேம்பாட்டுத் திட்டம்.**

**TN IGNITE – Innovation Growth Networking Ideation Technology Entrepreneurship.**

**புதுமையாக சிந்தித்து படைப்பில் முன்னேற மாணவர்களின் புத்தாக்கச் சிந்தனைகளைச் சமூக முன்னேற்றத்திற்கான தீர்வுகளாக மாற்றும் வகையில், தமிழ்நாடு மாணவர் புதுமை மற்றும் தொழில்முனைவுத்திறன் மேம்பாட்டுத் திட்டமானது 3,205 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் ரூ. 4.82 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.**

மாணவர்கள் தங்கள் சுற்றுப்புறங்களில் உள்ள பிரச்சினைகளை அடையாளங்கண்டு, அவற்றிற்குப் புதுமையான தீர்வுகளை உருவாக்கும் திறனை வளர்த்தெடுக்கும்வகையில், தொழில் வல்லுநர்களின் வழிகாட்டுதல், செயல்வழிக் கற்றல் மற்றும் தொழில்முனைவோர் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படும். எதிர்காலப் பணிவாய்ப்புகளுக்கும் அறிவுசார் பொருளாதாரத்திற்கும் தேவையான படைப்பாற்றல், தலைமைத்திறன், தொழில்முனைவு மனப்பாங்கு மற்றும் சிக்கல் தீர்க்கும் திறன்களை வளர்க்கும் இம்முயற்சி, அரசுப்பள்ளி மாணவர்களைப் பணிநாடுநர்களாக மட்டுமல்லாமல், மற்றவர்களுக்குப் பணி வாய்ப்புகளை ஏற்படுத்தும் புதுமையாளர்களாகவும் உருவாக்கும் இத்திட்டம், 3205 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் ரூ. 4.82 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**TN IGNITE** will be implemented in 3,205 Government Higher Secondary Schools to nurture innovation, entrepreneurship and future-ready leadership among students through hands-on learning and industry mentorship at a cost of **Rs. 4.82 crore.**



**9. மகிழ்வுடன் முன்னேறு - Magizhvudan Munneru.**

**மாணவர்களிடம் மறைந்திருக்கும் தனித்திறமையை உலகத்திற்கு வெளிக்கொணரும் வகையில் மாணவர்களின் படைப்பாற்றல், தலைமைத்துவம், தனித்திறமைகள் மற்றும் கற்றல் ஆர்வம் மலர, புத்தகம் இல்லா கல்வியாக, 'மகிழ்வுடன் முன்னேறு' திட்டம் 6279 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ரூ. 1.89 கோடி நிதி ஒதுக்கீட்டில் அறிமுகப்படுத்தப்படும்.**

கல்வியாண்டின் ஒவ்வொரு பருவத்தின் கடைசி வேலை நாளிலும், மாணவர்கள் தங்களது திறன்களை வெளிப்படுத்தவும், புதிய திறன்களைக் கற்றுக் கொள்ளவும், நிகழ்வுகளைத் திட்டமிட்டு நடத்துவதன் வாயிலாகத் தலைமைத்துவத் திறன்களை வளர்த்துக் கொள்ளவும், சக மாணவர்களின் திறமைகளை அங்கீகரிக்கவும் ஏதுவாக பள்ளிகளில் கடைபிடிக்கப்படும் இந்நிகழ்வு, 6279 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ரூ. 1.89 கோடி நிதி ஒதுக்கீட்டில் நடைமுறைப்படுத்தப்படும்.

To bring out students' skills, creativity, leadership qualities and individual talents, and to make their learning experience joyful and enriching, **Magizhvudan Munneru** scheme will be introduced in **6279 Government High and Higher secondary schools** at a cost of **Rs. 1.89 crore.**



**10. வாசிப்பை நேசிப்போம்.**

**வாசிப்பை நேசித்து அறிவை சுவாசிக்க அரசு மேல்நிலைப்பள்ளி மாணவருக்கு நாளிதழ்களும் பொது நூலகங்களிலிருந்து நூல்களும் தொடர்ந்து வழங்க "வாசிப்பை நேசிப்போம்" திட்டம் ரூ. 1.45 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.**

மாணவர்களிடையே வாசிப்பை வாழ்நாள் பழக்கமாக உருவாக்கும் நோக்கில், அரசுப் பள்ளிகளுடன் அருகிலுள்ள பொதுநூலகங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, ஆண்டுதோறும் மாணவர்களின் வயது மற்றும் வகுப்பிற்கேற்ப நடுநிலைப் பள்ளிகளுக்கு 150 சிறார் நூல்களும், உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கு 200 நூல்களும் வழங்கப்படும். மேலும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ் தலா ஒன்று வீதம் வழங்கப்படும். இதன் வாயிலாக, ஒவ்வொரு பள்ளியிலும் வாசிப்பை மையமாகக் கொண்ட அறிவுசார் கலாச்சாரம் உருவாக்கப்படும். இத்திட்டம், ரூ. 1.45 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

Government Schools and Public Libraries will be linked **to provide newspapers and age-appropriate books,** fostering a lifelong culture of reading, informed citizenship, creativity and critical thinking among every Government School student at a cost of **Rs. 1.45 crore.**



**11. தமிழ்ப் பேச்சு எங்கள் உயிர் மூச்சு.**

**மாணவர்களிடம் தமிழால் தன்னம்பிக்கை தலைமைத்துவம் ஓங்கிட மாணவர்களின் படைப்பாற்றல், விமர்சன சிந்தனை, சுயசிந்தனை, புதுமை மற்றும் கருத்து வெளிப்பாட்டுத் திறன்களை வளர்க்கும் வகையில், 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான புதிய திறன் சார்ந்த தமிழ் இலக்கியப் போட்டிகள், 2026–27ஆம் கல்வியாண்டில் 13,259 பள்ளிகளில் அறிமுகப்படுத்தப்படும்.**

21ஆம் நூற்றாண்டின் கல்வியில், மொழியறிவுடன் விமர்சன சிந்தனை, படைப்பாற்றல், புதுமை, தொடர்புத்திறன் மற்றும் கருத்து வெளிப்பாடு போன்ற திறன்களை மாணவர்கள் வளர்த்துக் கொள்வது அவசியமாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, மாணவர்களின் படைப்பாற்றல், கற்பனை, விமர்சன சிந்தனை, சுய சிந்தனை மற்றும் கருத்துகளைப் புதுமையாக வெளிப்படுத்தும் திறன்களை மேம்படுத்தும் வகையில், 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு **புதிய திறன் சார்ந்த தமிழ் இலக்கியப் போட்டிகள் அறிமுகப்படுத்தப்படும்**. இதன் மூலம், மாணவர்கள் தமிழில் சிந்திக்கவும், படைக்கவும், புதுமையான கருத்துகளை வெளிப்படுத்தவும் வாய்ப்பு பெறுவர். இம்முன்னெடுப்பு ரூ. 2.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

Skill-based Tamil literary competitions for Classes 6–12 will be introduced in 2026–27 across 13,259 schools to nurture **critical thinking, creativity, innovation, communication and independent expression** beyond rote learning will be implemented with an allocation of **Rs. 2.50 crore.**





**12. ஸ்போர்ட்ஸ் பிளஸ் - Sports Plus.**

**களத்தில் திறமை வளர்த்து உலக அரங்கில் தடம் பதிக்க மாணவர்களை விளையாட்டில் மிகச்சிறந்த சாதனையாளர்களாக உருவாக்கும் வகையில், 50 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளை 'விளையாட்டுத்திறனை மேம்படுத்தும் சிறப்புப் பள்ளிகளாக' உருவாக்க ரூ. 2.34 கோடி நிதி ஒதுக்கீட்டில் 'ஸ்போர்ட்ஸ் பிளஸ்' (Sports Plus) திட்டம் செயல்படுத்தப்படும்.**

மாணவரின் விளையாட்டுத்திறனைப் பள்ளி நிலையிலேயே அடையாளங்கண்டு, உலகத்தரத்தில் வளர்த்தெடுக்கும் நோக்கில் விளையாட்டுக்கேற்ற உட்கட்டமைப்புடன் NIS/CNIS தகுதி சான்றிதழ் பெற்ற திறமையான பயிற்சியாளர்களைக் கொண்டு பயிற்சி வழங்கப்படும். இந்த முன்னெடுப்பு, மாணவர்களை மாவட்ட, மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளுக்குத் தயார்படுத்துவதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாட்டை விளையாட்டுத் துறையில் முன்னணி மாநிலமாக உயர்த்துவதற்கான வலுவான அடித்தளத்தையும் உருவாக்கும். 'ஸ்போர்ட்ஸ் பிளஸ்' எனும் இத்திட்டம், 50 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ரூ. 2.34 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

50 Government High and Higher Secondary Schools will be developed as **Sports Plus schools** for nurturing young sporting talent with sports infrastructure, expert coaching and pathways to State, National and International competitions at a cost of **Rs. 2.34 crore.**



## 13. சதுரங்கம் மற்றும் பாரம்பரிய விளையாட்டுகள். Chess and Traditional Games.

**பள்ளி மாணவர்கள் விளையாடி வளரவும் மகிழ்ச்சியுடன் கற்கவும் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் அரசுப்பள்ளி மாணவர்களின் உடல்நலம், உளநலம் மற்றும் அறிவு வளர்ச்சியை ஒருங்கிணைக்கும் வகையில், 6,980 அரசு நடுநிலைப்பள்ளிகளில் சதுரங்கம் மற்றும் பாரம்பரிய விளையாட்டுகள் ரூ. 20.17 இலட்சம் மதிப்பீட்டில் நடைமுறைப்படுத்தப்படும்.**

விளையாட்டு என்பது பொழுதுபோக்கு மட்டுமல்ல; அது வாழ்வியல் திறன்களை வளர்க்கும் சிறந்த கற்றல் கருவியாகும். பள்ளி அளவில் முறையான பயிற்சி மற்றும் விளையாட்டுச் செயல்பாடுகள் வாயிலாக மாணவர்களின் உடற்தகுதி, கவனக்குவிப்பு, தர்க்கச் சிந்தனை, முடிவெடுக்கும் திறன், குழுச்செயல்பாடு மற்றும் தன்னம்பிக்கை ஆகிய பண்புகள் மேம்படுத்தப்படும். சதுரங்கம் மற்றும் பாரம்பரிய விளையாட்டுகளைப் பள்ளி வாழ்க்கையின் ஓர் அங்கமாக்கும் இம்முயற்சி, மகிழ்ச்சியான பள்ளிச்சூழலை உருவாக்குவதோடு, முழுமையான ஆளுமை வளர்ச்சிக்கும் வாழ்வியல் திறன்களைப் பெறுவதற்கும் வலுவான அடித்தளத்தை அமைக்கும். இம்முன்னெடுப்பு, ரூ. 20.17 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**Chess and Traditional Games** will be introduced across 6,980 Government middle Schools for students of Classes I to VIII to foster physical fitness, critical thinking, life skills and holistic development at a cost of **Rs. 20.17 lakh.**





## 14. ஒளிரும் புன்னகைத் திட்டம்.

**ஒவ்வொரு புன்னகையையும் பார்வையையும் ஆரோக்கியமாக்க அரசுப் பள்ளி மாணவர்களுக்காக அரசு, தனியார் மற்றும் பெருநிறுவன மருத்துவமனைகளின் பங்களிப்புடன், பல், கண் மற்றும் காது பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டு, தேவையான தொடர் சிகிச்சையினை உறுதி செய்யும் வகையில் "ஒளிரும் புன்னகைத் திட்டம்" நடைமுறைப்படுத்தப்படும்.**

அரசுப்பள்ளி மாணவர்களின் ஆரோக்கியமான வளர்ச்சி, சிறந்த கற்றல், நல்ல உடல்நலத்தினை உறுதி செய்யும் வகையில், பல், கண் மற்றும் காது பரிசோதனைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டு, பிரச்சினைகள் ஆரம்ப நிலையிலேயே கண்டறியப்பட்டு உரிய சிகிச்சை, ஆலோசனை மற்றும் தொடர்ச்சியான மருத்துவக் கண்காணிப்பு வழங்கப்படும்.

**Dental, Eye and Ear Health checkup** for Government School Students will be launched in partnership with Government, Private and Corporate Hospitals to ensure early detection, timely intervention and community participation in safeguarding every child's well-being.



**15. உயர்கல்வி வழிகாட்டிச் செயலி.**

**Higher Education Guidance App.**

**மாணவரின் கனவுக்கு சரியான வழிகாட்டி உயர்கல்விப் பயணம் என்ற தெளிவான தெரிவுகளுடன், அரசுப்பள்ளி மாணவர்களுக்கான உயர்கல்வி வாய்ப்புகள், உதவித்தொகைகள் மற்றும் தொழில்வாய்ப்பு வழிகாட்டுதல்கள் குறித்த முழுமையான தகவல்களை ஒருங்கிணைத்து அளிக்க, செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான 'உயர்கல்வி வழிகாட்டிச் செயலி' ரூ. 3 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.**

மாணவர்கள் தங்கள் திறன், விருப்பம் மற்றும் இலக்குகளுக்கு ஏற்ற உயர்கல்விப் படிப்புகளையும் கல்வி நிறுவனங்களையும் தேர்ந்தெடுக்க உதவுவதோடு, சேர்க்கை நடைமுறைகள், இடஒதுக்கீடு, உதவித்தொகைகள் மற்றும் தொழில்வாய்ப்பு குறித்த வழிகாட்டுதலையும் வழங்கும் வகையில் இச்செயலி, ரூ. 3 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும். ஆசிரியர்களுக்கும் இதற்கான பயிற்சி அளிக்கப்படும்.

An **AI based Higher Education Guidance App** will be developed for Government School students, providing a single digital platform for courses, colleges, admissions, reservations, scholarships and career pathways to support informed higher education choices at a cost of **Rs. 3 crore.**





**16. துணை - மாணவர்களின் கல்வி மேம்பாடு மற்றும் உணர்வு நல ஆலோசனைச் சேவைகள்.**

**THUNAI - Timely Help, Understanding, Nurturing, Assistance & Intervention.**

**ஒவ்வொரு மாணவரின் மனநலனைப் பேணுவதை உறுதி செய்யும் பொருட்டு மாணவர்களுக்குப் பாதுகாப்பான, பரிவுமிக்க மற்றும் ஆதரவான பள்ளிச்சூழலை உருவாக்க, அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் மூன்று அடுக்குகளைக் கொண்ட, மாணவர்களின் கல்வி மேம்பாடு மற்றும் உணர்வு நல ஆலோசனை சேவைகள் வழங்கிட 'துணை' எனும் திட்டம், ரூ. 27.43 கோடி நிதி ஒதுக்கீட்டில் உருவாக்கப்படும்.**

மாணவர்களின் மனநலம் மற்றும் உணர்வுசார் நல்வாழ்வைப் பாதுகாக்க. பள்ளி, வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் 943 பயிற்சி பெற்ற ஆலோசகர்கள் மற்றும் 5 தொலைவழி ஆலோசகர்களைக் கொண்ட ஒருங்கிணைந்த ஆலோசனை அமைப்பு ஏற்படுத்தப்படும். மனநலம் மற்றும் நடத்தை சார்ந்த சவால்கள் ஆரம்ப நிலையிலேயே கண்டறியப்பட்டு, உரிய ஆலோசனை, அவசர உதவி மற்றும் தேவையான மருத்துவப் பரிந்துரைகள் வழங்கப்படும். ஆசிரியர்களுக்கும் தேவையான வழிகாட்டுதல் அளிக்கப்படும். இந்த முயற்சி, ரூ. 27.43 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**THUNAI Initiative** will establish a three-tier emotional wellbeing and counselling support system for all Government High and Higher Secondary Schools, ensuring early intervention, counselling and holistic student well being. The Budget allocation will be **Rs. 27.43 Crore.**



**17. மாற்றுத்திறன் மாணவர்களின் திறன்களை உயர்த்தும் முன்னெடுப்பு.**

**ENABLE - Empowering Needs, Abilities, Learning & Education.**

**உள்ளடக்கிய கல்வியின் வலுவான அடித்தளத்தை மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு அளிக்கும்வகையில், 414 பள்ளி ஆயத்தப் பயிற்சி மையங்களில் உள்ள 9731 குழந்தைகள் பயனடைந்திட நவீன கற்றல் மற்றும் சிகிச்சை உபகரணங்கள், ரூ. 8.28 கோடி மதிப்பீட்டில் வலுப்படுத்தப்படும்.**

ஒவ்வொரு மாற்றுத்திறன் கொண்ட குழந்தையும் தரமான, குழந்தைநேயமிக்க மற்றும் உள்ளடக்கிய கற்றல் சூழலில் பள்ளிக் கல்விக்குத் தயாராகும்வகையில், கற்றல் மற்றும் இயக்கச் சிகிச்சை உபகரணங்கள், உதவி சாதனங்கள் மற்றும் தேவையான தளவாட வசதிகள் வழங்கப்படும். இந்த முயற்சி, குழந்தைகளின் முழுமையான வளர்ச்சியையும் தன்னம்பிக்கையையும் மேம்படுத்துவதோடு, பள்ளிக் கல்வியில் சமமான பங்கேற்பையும் உறுதி செய்யும்.

**414 School Readiness Programme Centres** for Children with Special Needs will be strengthened with modern learning, therapy and assistive support to advance inclusive education,at a cost of **Rs. 8.28 crore.**





**18. பாதுகாப்பான பள்ளி – மகிழ்வான கற்றல்.**
**Safe Schools – Enabling Joyful Learning.**

**ஒருங்கிணைந்த பள்ளி மானியம் உயர்வு – மின்சார விபத்துகளைத் தடுக்க RCCB கருவிகள் பொருத்தப்படும்.**

அரசுப் பள்ளிகளில் மாணவர்களுக்கு பாதுகாப்பான, சுகாதாரமான மற்றும் மகிழ்வான கற்றல் சூழலை உருவாக்கும் வகையில், 37,417 அரசுப் பள்ளிகளுக்கு வழங்கப்படும் ஒருங்கிணைந்த பள்ளி மானியம் உயர்த்தி வழங்கப்படும். இதற்காக, கூடுதலாக ரூ. 74.58 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒருங்கிணைந்த பள்ளி மானியம் மொத்தம் ரூ. 187.29 கோடியாக உயர்த்தி வழங்கப்படும்.

இந்த மானியத்தின் மூலம் பள்ளிகளில் சிறுபராமரிப்புப் பணிகள், தேவையான நுகர்பொருட்களை வாங்குதல் மற்றும் பள்ளி உபகரணங்களை மாற்றுதல் போன்ற அத்தியாவசியப் பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், மாணவர்களின் மின்சாரப் பாதுகாப்பை உறுதி செய்து, மின்சார அதிர்ச்சியால் ஏற்படும் விபத்துகளைத் தடுக்கும் வகையில், பள்ளிகளில் RCCB (Residual Current Circuit Breaker) கருவிகள் பொருத்தப்படும்.

**Composite School Grant for 37,417 Government Schools,** will be increased by **Rs. 74.58 cr.** making it a total of **Rs. 187.29 cr.** which will also provide for the installation of RCCBs to enhance school safety and prevent electrical accidents.



**19. ஆசிரியர்களுக்கான பன்னாட்டு சிறப்புத் திறன் மேம்பாட்டுத் திட்டம்.**

**International Teacher Excellence Programme.**

**உலகத்தர பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு மாணவர்களின் திறன்களை உலகத்தரத்திற்கே உயர்த்தும்வகையில், சர்வதேசப் பல்கலைக்கழகங்களின் வாயிலாக, ஆசிரியர்களுக்கான பன்னாட்டுத் தொழில்முறை மேம்பாடு சார்ந்த படிப்புகளைப் பெறுவதற்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ. 1.8 கோடி நிதி ஒதுக்கீட்டில், இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.**

உலகப் புகழ்பெற்ற சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் நேரடியாகத் தங்கி மற்றும் இணையவழியாகப் பயிலவும் வாய்ப்புகள் உருவாக்கப்படும். இதன்வாயிலாக, கற்பித்தல் முறைகள், தலைமைத்துவம் மற்றும் பள்ளி மேலாண்மை ஆகியவற்றில் உள்ள உலகளாவிய சிறந்த நடைமுறைகள் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும்.

To enhance teachers’ skills to global standards, the Government of Tamil Nadu will collaborate with international universities to **provide 4–12 weeks professional development programmes** in hybrid mode, enabling them to become the state’s master trainers at a cost of **Rs. 1.8 crore / annum.**





**20. ஆசிரியர்களுக்கான கல்விசார் திட்டமிடல் மற்றும் செயலாக்கப் பயிற்சி.**

**TN–LEADS - Leadership, Excellence and Academic Development for Schools.**

**சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு மாணவர்கள் கற்றலில் சிறக்க உலகத் தரக் கற்பித்தலுக்குத் தேவையான அறிவு, திறன் மற்றும் தலைமைத்துவத்தை வலுப்படுத்தும் வகையில், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காகக் கல்விசார் திட்டமிடல் மற்றும் செயலாக்கப் பயிற்சி ரூ. 11.30 கோடி நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்படும்.**

கல்வித்துறையில் ஏற்படும் புதிய அணுகுமுறைகள், மின்னுரு தொழில்நுட்பங்கள் மற்றும் நவீன கற்பித்தல் முறைகளில் தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களின் கல்விசார் திட்டமிடல் திறன்களைத் தொடர்ந்து மேம்படுத்தும் மாநில அளவிலான பயிற்சி TN – LEADS ஆகும். தலைமைத்துவம், வகுப்பறைக் கற்பித்தல், கல்வித் தொழில்நுட்பம் மற்றும் மாணவர் மையப்படுத்தப்பட்ட கற்றல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உயர்தரப் பயிற்சிகள் வழங்கப்படும்.

**TN – LEADS,** a State-level professional development program for Headmasters and Teachers with best in-class leadership, digital and pedagogical skills will be conducted at a cost of **Rs. 11.30 crore.**



## 21. ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மின்னுரு மாற்றம்.
## Digital transformation of Teachers Recruitment Board.

**ஒவ்வொரு தெரிவிலும் வெளிப்படைத்தன்மையையும் நியமனத்தில் நம்பகத்தன்மையையும் உறுதி செய்யும் வகையில் ஆசிரியர் தேர்வு வாரிய தேர்வுகளுக்கு விண்ணப்பிப்போருக்கு ஒருமுறை பதிவு, மின்னுரு சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் மின்னுரு முறையிலான தெரிவு (Digital Recruitment Interface) நடைமுறைகளை ஒருங்கிணைத்து முழுமையான மின்னுருவாக்கம் ரூ. 4.70 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும்.**

ஆசிரியர் தேர்வு வாரிய தேர்வுகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு எளிமையான, விரைவான மற்றும் வெளிப்படையான சேவையை வழங்கும் வகையில், ஒருமுறைப் பதிவு (One Time Registration - OTR).மின்னுரு சான்றிதழ் சரிபார்ப்பு, நிகழ்நேர விண்ணப்பக் கண்காணிப்பு, அறிவிக்கைகள், ஆவண மேலாண்மை மற்றும் தேர்வு முதல் நியமனம் வரை அனைத்து நிலைகளையும் ஒருங்கிணைக்கும் முழுமையான மின்னுரு முறையிலான தெரிவு நடைமுறைகள் (Digital Recruitment Interface) உருவாக்கப்படும். இதனால், நிருவாக செயல்திறன். வெளிப்படைத்தன்மை, நம்பகத்தன்மை மற்றும் நேர மேலாண்மையை மேலும் வலுப்படுத்தி, பள்ளிக் கல்வித்துறையின் மனிதவள நிருவாகத்தில் புதிய மின்னுருவாக்கம் உருவாக்கப்படும்.

**A Comprehensive Digital transformation of TRB** will be taken up integrating One-Time Registration (OTR), electronic certificate verification, application tracking and end-to-end digital recruitment to ensure transparency, efficiency and candidate convenience at a cost of **Rs. 4.70 crore.**



## 22. அரசுத் தேர்வு ஆவணங்களை மின்னணுமயமாக்கல்.
## Digitisation of Government Examination Records.

**அரசுத் தேர்வுகளின் அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பதிவேடுகள் முழுமையாகமின்னுரு வடிவில் பாதுகாக்கப்பட்டு, விரைவான, நம்பகமான மற்றும் எளிதான சான்றிதழ் சரிபார்ப்பை உறுதி செய்யும் அமைப்பு ரூ. 38 இலட்சம் மதிப்பீட்டில்செயல்படுத்தப்படும்.**

அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் பராமரிக்கப்படும் 2021 முதல் 2026 வரையிலான சுமார் 18.60 இலட்சம் பக்கங்கள் கொண்ட அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பதிவேடுகள் (Tabulated Mark Register) மின்னுருவடிவில் பாதுகாக்கப்படும். இதன் வாயிலாக, பதிவுகளின் நீண்டகாலப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதோடு, சான்றிதழ்களின் மறுபிரதி வழங்கல் மற்றும் உண்மைத்தன்மையை உறுதிசெய்தல் ஆகியன விரைவாகவும் துல்லியமாகவும் சரிபார்க்கும் வசதி ஏற்படுத்தப்பட்டு, தேர்வர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்குச் சிறந்த சேவை வழங்கப்படும்.

**Government Examination records** will be digitised and securely preserved to enable long-term archival, reliable verification and faster retrieval of academic records at a cost of **Rs. 38 lakh.**



## 23. ஸ்மார்ட் நூலக உறுப்பினர் அட்டை.
## Smart Library Card.

**பொது நூலக உறுப்பினர் சேவைகள் அனைத்தும் வளர்ந்து வரும் தொழில்நுட்பத் தேவைகளுக்கேற்ப ஸ்மார்ட் நூலக உறுப்பினர் அட்டை மற்றும் நிகழ்நேர மின்னுரு வசதிகளுடன் ஒருங்கிணைக்கப்படும்.**

மின்னுருவாக்கம் செய்யப்பட்ட நூலகங்களின் விரிவாக்கத்துடன் இணைந்து, உறுப்பினர் கட்டணம் மற்றும் பிற நூலகக் கட்டணங்களை எளிதாகவும், வெளிப்படையாகவும் செலுத்த புதிய செயலி அறிமுகப்படுத்தப்படும். ஸ்மார்ட் உறுப்பினர் அட்டை, மின்னுருஇரசீது, நிகழ்நேர சேவைக் கண்காணிப்பு மற்றும் மாநில அளவிலான மின்னுரு தகவல் பலகை போன்ற வசதிகள் வாயிலாக வாசகர்களுக்கு விரைவான, வெளிப்படையான மற்றும் நவீன நூலகச் சேவைகள் வழங்கப்படும். இம்முயற்சியினால் பொது நூலகங்கள் முழுமையான மின்னுரு அறிவு மையங்களாக மாற்றியமைக்கப்படும்.

**Smart Library Card** – All public library membership services will be integrated with smart membership cards and real-time electronic facilities.



**24. நூலக செயலி - Noolagam App.**

**வாசகர்களின் தேவைகளை நிகழ்நேரத் தரவுகளின் அடிப்படையில் அறிந்து, விரைவான, வெளிப்படையான மற்றும் பயனர் மையப்படுத்தப்பட்ட நூலகச் சேவைகளை வழங்க ‘நூலக செயலி’ (Noolagam App) ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.**

பொதுமக்கள் நூலகங்களைத் தொடர்ந்து பயன்படுத்த ஊக்குவிக்கும் வகையில், உறுப்பினர் சேர்க்கை, நூல்கள் வழங்குதல் மற்றும் திரும்பப் பெறுதலோடு, நூலக வளங்களின் பயன்பாடு, நூலக நிகழ்ச்சிகள் மற்றும் பணியாளர் வருகை உள்ளிட்ட தகவல்கள் நிகழ்நேரத்தில் ஒருங்கிணைக்கப்படும். இந்தத் தரவுகளின் அடிப்படையில் வாசகர்களின் தேவைகள் துல்லியமாகக் கண்டறியப்பட்டு, சேவை வழங்கல் விரைவாகவும் திறன்மிக்கதாகவும் மாற்றப்படும். இதன் வாயிலாக, பொது நூலகங்கள் தரவு சார்ந்த, நவீன அறிவு மையங்களாக வளர்ச்சியடையும்.

The **Noolagam App** will be developed to deliver faster, transparent and data-driven library services through real-time insights into reader needs and library usage at a cost of **Rs. 20 lakh.**



**25. நூலகங்களில் சுகாதாரமான சூழல்.**
**Hygienic Libraries ..Happy Readers.**

**தூய்மை நிறைந்த நூலகங்களைக் கொண்டு வாசகர்களுக்குச் சுகாதாரமான சூழலை உருவாக்க, 90 பொது நூலகங்களில் ரூ. 1.80 கோடி மதிப்பீட்டில் நவீனக் கழிப்பறை வசதிகள் அமைக்கப்படும்.**

அனைவரும் எளிதில் அணுகும் வகையில் பொதுக் கற்றல் மையங்களாக நூலகங்கள் விளங்கிட ஏதுவாக, வாசகர்களுக்கான வசதி மற்றும் சுகாதாரத் தரம் மேம்படுத்தப்படும். இதன் வாயிலாக, தரமான சுகாதாரமான நூலகச் சூழல் உருவாக்கப்படும்.

**Modern toilet facilities** will be established in 90 Public Libraries to enhance cleanliness, accessibility and user comfort at a cost of **Rs. 1.80 crore.**





**26. இளைய தலைமுறைக்கு அரிய நூல்கள்.**
**Timeless Books... For Tomorrow's Minds.**

**தமிழரின் தொன்மைச் சிறப்பை அடுத்த தலைமுறைக்குப் பாதுகாத்து எடுத்துச் செல்லும் வகையில், ஆய்வாளர்களால் தொகுக்கப்பட்ட தமிழின் 25 பழம்பெரும் நூல்கள் சிறப்பு மறுபதிப்பாக ரூ. 30 இலட்சம் மதிப்பீட்டில் வெளியிடப்படும்.**

தமிழின் செழுமையான இலக்கிய, வரலாற்று மற்றும் அறிவியல் மரபுகளைப் பாதுகாத்து, இளைய தலைமுறையினருக்கு எளிதில் கிடைக்கச் செய்யும் நோக்கில் இந்தச் சிறப்பு வெளியீடு மேற்கொள்ளப்படும். பல்வேறு துறைகளில் ஆய்வு செய்யப்பட்ட அரிய தமிழ்நூல்களை மறுபதிப்பு செய்வதன் வாயிலாக, தமிழறிவு, ஆய்வு மரபு மற்றும் பண்பாட்டுப் பாரம்பரியம் மேலும் வலுப்பெற்று, தமிழின் அறிவுச் செல்வம் உலகளவில் பரவுவதற்கான புதிய வாய்ப்புகள் உருவாகும்.

**Twenty-five classical Tamil works** will be reprinted and republished to preserve and promote Tamil's rich intellectual and cultural heritage at a cost of **Rs. 30 lakh.**



**27. சென்னைப் புத்தகக் கண்காட்சிக்கு வழங்கப்படும் அரசு மானியம் ரூ. 75 இலட்சத்திலிருந்து ரூ. 1 கோடியாக உயர்த்தி வழங்கப்படும்.**

**The Chennai Book Fair Grant will be enhanced from Rs. 75 lakh to Rs. 1 crore.**

வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்து, அறிவையும் சிந்தனையையும் வளப்படுத்தும் சென்னைப் புத்தகக் கண்காட்சியின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் (BAPASI) ஆண்டுதோறும் நடத்தும் இக்கண்காட்சிக்கான அரசு மானியம் ரூ. 75 இலட்சத்திலிருந்து ரூ. 1 கோடியாக உயர்த்தி வழங்கப்படும்.

**Government Grant for Chennai Book Fair,** organised annually by the Booksellers and Publishers Association of South India (BAPASI) will be increased from **Rs. 75 Lakh to 1 Crore.**





**28. சீருடையில் சிறப்பு – விளையாட்டில் தன்னம்பிக்கை.**
**Sports Jerseys.**

**அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் 23.40 இலட்சம் மாணவர்களுக்கு புதிய விளையாட்டு உடை ரூ. 81.89 கோடி செலவில் அடுத்த கல்வியாண்டு முதல் வழங்கப்படும்.**

ஒவ்வொரு மாணவரும் தன்னம்பிக்கையுடனும் சுறுசுறுப்புடனும் விளையாட்டில் பங்கேற்கும் வகையில், அவர்களின் வயது மற்றும் பயன்பாட்டுத் தேவைகளுக்கு ஏற்றவாறு புதிய விளையாட்டு உடை வடிவமைக்கப்பட்டு, அடுத்த கல்வியாண்டு முதல் ரூ. 81.89 கோடி செலவில் வழங்கப்படும்.

மாணவர்களின் கற்றல், விளையாட்டு மற்றும் அன்றாடப் பள்ளிச் செயல்பாடுகளுக்கு ஏற்ற வகையில், நீடித்த தரம், வசதி மற்றும் பயன்பாட்டை மையமாகக் கொண்டு விளையாட்டு உடை வடிவமைக்கப்படும். இதன் மூலம் மாணவர்கள் விளையாட்டில் ஆர்வத்துடன் பங்கேற்று, தன்னம்பிக்கையையும் உடல் நலத்தையும் மேம்படுத்திக் கொள்ள ஊக்குவிக்கப்படுவர்.

**Sports jerseys** will be provided to 23.40 lakh Government and Government Aided school students in Classes 9–12 to empower them with greater comfort, confidence and enthusiasm to participate in sports and everyday school activities at a cost of **Rs. 81.89 cr.**



**29. குடிமைப்பண்புடன் வளரும் தலைமுறை.**

**CIVIC – Citizenship, Integrity, Values, Responsibility & Community.**

**மாணவர்களிடம் குடிமை உணர்வு, பொறுப்புணர்வு, சமூக அக்கறை, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பரிவு ஆகிய பண்புகளை வளர்க்கும் வகையில், வயதுக்கும் வகுப்பு நிலைக்கும் ஏற்ற செயல்பாடுகள் “CIVIC” என்ற தலைப்பில் புதிய அறிவுப்பு பாடத்திட்டத்தில் ஒருங்கிணைக்கப்படும்.**

இதன் மூலம் மாணவர்கள் தங்களது உரிமைகள் மற்றும் கடமைகளைப் புரிந்துகொண்டு, பிறரை மதித்து, சமூகத்தின் மீது அக்கறையுடன் செயல்படும் பொறுப்புள்ள குடிமக்களாக உருவாகும் வகையில், பள்ளிக் கல்வியிலேயே குடிமைப்பண்பு மற்றும் சமூகப் பொறுப்புணர்வு வளர்க்கப்படும்.

In the new ARIVU curriculum **CIVIC component** will nurture responsible, empathetic and socially conscious citizens by embedding civic values, responsibility and community engagement into age-appropriate learning.





## 30. ஓடி விளையாடு – திறமைகளை வெளிக்கொணர்வோம்.
## PLAY – Physical Learning, Athletics & Youth.

மாணவர்களின் தனித்திறன்களை வெளிக்கொணரவும், விளையாட்டுகளில் ஆர்வத்துடன் பங்கேற்கும் மாணவர்களை ஊக்குவிக்கவும், 'ஓடி விளையாடு' முன்னெடுப்பின் கீழ், விளையாட்டு, கலை மற்றும் கல்வி இணைச்செயல்பாடுகளுக்காக தினமும் ஒரு பிரிவேளை ஒதுக்கீடு செய்யப்படும்.

இதன் மூலம், விளையாட்டு, கலை மற்றும் கல்வி இணைச்செயல்பாடுகளில் மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தவும், ஆர்வத்துடன் பங்கேற்கவும் தொடர்ந்து வாய்ப்புகள் வழங்கப்படும்.

The **PLAY initiative** will provide every student with a daily period for sports, arts and co-curricular activities, enabling them to discover and showcase their talents.



**31. e-வாசல் - ஒருங்கிணைந்த மின்னுரு நுழைவாயில்.**
**e-VAASAL – Enabling Virtual Access for All Schools Administration & Learning.**

**பள்ளிக் கல்வித்துறையின் அனைத்து முக்கிய சேவைகளையும் ஒருங்கிணைத்து, வெளிப்படையான, பொறுப்புணர்வுமிக்க தரவு அடிப்படையிலான நிருவாகத்தை வலுப்படுத்த ‘e-VAASAL’ ஒருங்கிணைந்த மின்னுரு நுழைவாயில் ரூ. 5 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.**

மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பிற பயனாளிகள் பல்வேறு சேவைகளை ஒரே தளத்தில் எளிதாகவும் விரைவாகவும் பெறும்வகையில் இந்த ஒருங்கிணைந்த மின்னுரு அமைப்பு உருவாக்கப்படும். சேவை வழங்கலை எளிமைப்படுத்துவதோடு, வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு மற்றும் நிகழ்நேரத் தரவு அடிப்படையிலான முடிவெடுப்பை வலுப்படுத்தி, பள்ளிக் கல்வித்துறையை முழுமையான மின்னுரு ஆளுமையை நோக்கி முன்னேற்றிடும்.

**e-VAASAL,** a single integrated digital platform, will provide all School Education services to strengthen transparency, accountability and data-driven governance at a cost of **Rs. 5 crore.**

**ராஜ்மோகன்**
**பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்**







"ஒவ்வொரு குழந்தையும் கற்க,
ஒவ்வொரு குழந்தையும் வளர,
ஒவ்வொரு குழந்தையின் கனவுகளை நனவாக்க..."



**தமிழ்நாடு அரசு**
**பள்ளிக் கல்வித் துறை**